www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

B

# முதல் பருவத் தேர்வு – 2024
## சமூக அறிவியல்

**வகுப்பு: VIII** **மதிப்பெண்கள் : 60**

**நேரம் : 2:00 மணி**

### பகுதி அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்
2. அ) மதுரை
3. ஆ) கூற்றும் சரி , கூற்றுக்கான காரணமும் சரி
4. இ) சுழலுதல்
5. இ) அண்டார்டிகா
6. அ) ஜவஹர்லால் நேரு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக..**

7. சிந்து
8. காஞ்சிபுரம்
9. ஆசியா
10. Dr.B.R.அம்பேத்கர்

**III. பொருத்துக:**

11. மொகஞ்சதாரோ – இறந்தோர் மேடு
12. எழுதப்பட்ட பதிவுகள் – செப்பு தகடுகள்
13. மரியானாஅகழி – பசிபிக் பெருங்கடல்
14. வேற்றுமையில் ஒற்றுமை – இந்தியா

**IV. சரியா தவறா எனக் கூறுக.**

15. தவறு
16. சரி

**V. பொருந்தாததை வட்டமிடு**

17. அயோ
18. சுற்றுக்கலம்

### பகுதி – ஆ

**VI. 19. (அ) வேறுபடுத்துக.**

| பெருங்கடல் | கடல் |
|---|---|
| பெரும் நீர்ப்பரப்பு பெருங்கடல்கள் என அழைக்கபடுகின்றது. எ.கா. பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல் | முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிலத்தால் சூழப்பட்ட பெரிய நீர்ப்பரப்பு கடல் எனப்படுகிறது. எ.கா. அரபிக்கடல், வங்காளவிரிகுடா |

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**(ஆ) காரணம்.**

துருவப் பகுதியில் பூமியைச் சுற்றி தூரம் இல்லாததால் , புவியின் சுழலும் வேகம் துருவப் பகுதிகளில் சுழியமாக உள்ளது.

VII. 20. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை?

பண்டைய கால மக்களின் வாழ்க்கை முறைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.

21. பழங்கால வேட்டை முறைகளை விளக்கி கூறவும்?

ஆதிகாலத்தில் வேட்டையாடுவதுதான் மனிதர்களின் முதன்மையான தொழில் .ஒரு குச்சி (அ) கல்லால் ஒரு பெரிய விலங்கைக் கொல்வது அவர்களுக்குக் கடினமாக இருந்தது. எனவே, கூரான அயுதங்களை பயன்படுத்த முடிவெடுத்தார்கள்.

22. பரிணாமம் என்றால் என்ன?

மனித இனம் மாற்றங்களை அடைந்து , ஒரு மேம்பட்ட நிலையை நோக்கி வளர்ச்சி பெறும் வழிமுறையைப் பரிணாமம் என்கிறோம்.

23) பெருங்குளம் பற்றி உனக்குத் தெரிந்தவற்றைக் கூறு ?

மொகஞ்சதாரோவில் உள்ள பெருங்குளம் நன்கு அகன்று செவ்வக வடிவத்தில் நகரின் நடுவில் அமைந்துள்ள நீர்த்தேக்கமாகும் இக்குளத்தின் சுவர்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு , நீர் கசியாமல் இருப்பதற்காக சுவரிலும் தளத்திலும் பல அடுக்குகள் இயற்க்கைத் தார் கொண்டு பூசப்பட்டிருந்தது.

24) லோத்தல் நகரத்துடன் தொடர்புடைய நாகரிகம் எது?

சிந்து வெளி மக்கள் லோத்தலில் கப்பல் கட்டும் தளம் அமைத்து கடல் வாணிபம் செய்தார்கள்.

25) சூரிய அண்மை என்றால் என்ன?

சூரிய அண்மை என்பது புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்கு மிக அருகில் வரும் நிகழ்வாகும்.

26) பெருங்கடல் என்றால் என்ன?

பெரும் நீர்ப்பரப்பு பெருங்கடல்கள் என அழைக்கப்படுகின்றது. எ : கா பசிபிக் பெருங்கடல் , அட்லாண்டிக் பெருங்கடல்.

27) அட்லாண்டிக் பெருங்கடலின் எல்லைகளாக உள்ள கணடங்கள் யாவை ?

அட்லாண்டிக் பெருங்கடலின் கிழக்கே ஐரோப்பாவும், ஆப்பிரிக்காவும் , மேற்கே வட அமெரிக்காவும் , தென் அமெரிக்காவும் எல்லைகளாக உள்ளன.

28) இந்தியாவில் கொண்டாடப்படும் பல்வேறு விழாக்களில் எவையேனும் மூன்றை பற்றி எழுதுக?

கிறிஸ்துமஸ் – இந்தியா முழுவதும் உள்ள கிறிஸ்த்துவ மக்களால் கொண்டாடப் படுகின்றது. ரம்ஜான் இந்தியா முழுவதும் உள்ள இஸ்லாமிய மக்களால் கொண்டாடப்படுகின்றது.பொங்கல் – கிறிஸ்துமஸ் – ரம்ஜான்.

29) பாகுபாடு என்றால் என்ன?

மக்களுக்கெதிரான எதிர்மறையான செயல்களே பாகுபாடு எனப்படும். பாகுபாடானது நிறம், வர்க்கம்,மதம்,பாலினம் போன்றவற்றின் அடிப்படையில் ஏற்படுவதாகும்.

## பகுதி – இ

**VIII. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளி .**

30) பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையை, தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிடுக.

| பழைய கற்கால மனிதன் | தற்கால மனிதன் |
|---|---|
| நாடோடி வாழ்க்கை வாழ்ந்தான். | ஓரிடத்தில் நிலையான வாழ்க்கை வாழ்ந்தனர் |
| வேட்டையாடுதல் முதன்மையான | விவசாயம் முதன்மையான தொழிலாக உள்ளது |
| பச்சையான இறைச்சி மற்றும் | வேக வேகவைத்து உணவினை உண்டான். |
| உணவினை தேடி ஓரிடத்திலிருந்து | உற்பத்தி செய்வதை தெரிந்து வைத்திருந்தான். |
| இடி மின்னல் மரங்களை தெய்வமாக | உருவ வழிபாடு பின்பற்றப்பட்டது. |

31. லோத்தல் ஒரு கப்பல் கட்டும் தளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீ அறிவது என்ன?

ஹரப்பா மக்கள் பெரும் மனிதர்களாக இருந்தார்கள். மெசபடோமியாவுடன் விரிவான கடல் வணிகம் நடைபெற்றிருக்கிறது. சிந்துவெளி முத்திரைகள் தற்கால ஈராக் குவைத் மற்றும் சிரியா ஆகிய பகுதிகளை குறிக்கும்.பண்டைய மெசபடோமியாவில் உள்ள சுமேர் பகுதிகளில் கிடைத்துள்ளது. சுமேரியாவின் அக்காடிய பேரரசிற்குட்பட்ட அரசன் நாரன்ஸ் என்பவர் சிந்து சமவெளி பகுதியில் உள்ள மெழுகா என்னும் இடத்தில் இருந்து அணிகலன் வாங்கியதாக குறிப்புகள் உள்ளன. பாரசீக வளைகுடா மற்றும் மெசபடோமியாவில் கண்டுபிடிக்கப்பட்டதை போன்று உருளை வடிவ முத்திரைகள் சிந்து வெளிப்பகுதிகளிலும் காணப்படுகின்றன. இது இந்த இரு பகுதிகளிலும் வணிகம் நடந்ததை காட்டுகிறது. தற்கால குஜராத்தில் உள்ள லோத்தலில் கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடம் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது இவர்கள் மேற்கொண்ட கடல் வணிகத்தை உறுதிப்படுத்துகிறது.

32 பூம்புகாரின் வணிகம் பற்றி ஒரு பத்தியளவில் எழுதுக?

பூம்புகார் பெருங்கடல் வணிகர்கள் நிறைந்த பகுதியாக விளங்கியது. எங்கு வணிகம் செய்ய கிரேக்கம், ரோம் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் வந்த வண்ணம் இருந்துள்ளார்கள். இதன் விளைவாக சிந்தனை பரிமாற்றமும் பண்பாட்டு கலப்பும் நிகழ்ந்தன. பூம்புகார் நகர துணைவர்கள் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர்

பெற்றவர்களாக விளங்கினார்கள். மிகச் சரியான விலைக்கு பொருள்களை விட்டனர். கூடுதலான விலைக்கு பொருளை விற்பது தவறான செயல் என அவர்கள் கருதினர் என்பதை பட்டின பாலை கூறுகிறது. சிலப்பதிகாரநாயகி கண்ணகியின் தந்தை மாசாத்துவன் பெருங்கடல் வணிகம் என்று பொருள் கொண்டவர் ஆவார்.

33. உட்புற மற்றும் வெளிப்புறக் கோள்கள் – வேறுபடுத்துக

| உட்புறக் கோள்கள் | வெளிப்புறக் கோள்கள் |
|---|---|
| 1. சூரியனுக்கு அருகில் உள்ள நான்கு கோள்களான புதன், வெள்ளி, பூமி மற்றும் செவ்வாய் முதலியன உட்புறக் கோள்கள் ஆகும்.<br>2. இக்கோளின் மேற்பரப்பில் மலைகள், எரிமலைகள் மற்றும் தரைக் குழிப்பள்ளங்கள் காணப்படுகின்றன | 1. சூரியக் குடும்பத்தில் வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியன வெளிபுறக் கோள்கள் ஆகும்.<br>2. இக்கோள்கள் வாயுக்களால் நிரம்பி காணப்படுகின்றன. |

34. பீடபூமி பற்றிக் குறிப்பு வரைக?

பீடபூமிகள் சமமான மேற்பரப்பை கொண்ட உயர்த்தப்பட்ட நிலப்பரப்பு பீடபூமி ஆகும். இவை மலைகளைப் போன்று வான்சரிவுகள் கொண்டவை. உலகிலேயே உயர்ந்த பீடபூமி திபெத் பீடபூமி ஆகும். எனவே திபெத் பூமியை உலகத்தின் கூரை என்று அழைக்கிறோம். இது மேசை நிலம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்தியாவில் காணப்படும் சோட்டா நாகபுரி பீடபூமி கனிமங்கள் நிறைந்த பகுதியாகும்.

35. சமவெளி, மக்கள் நெருக்கம் மிகுந்ததாக காணப்படுகிறது. காரணம் கூறு?

சமவெளி மக்கள் நெருக்கம் மிகுந்ததாக காணப்படுகிறது. பெரும்பாலும் சமவெளிகள் ஆறுகள் அதன் துணையாறுகள் மற்றும் கிளை ஆறுகளால் உருவாக்கப் படுகின்றன. இங்கு வளமான மண்ணும் நீர் பாசனமும் இருப்பதால் வேளாண்மை தழைத்தோங்குகிறது. மக்கள் வாழ்வதற்கு சமவெளிகள் ஏற்றதாய் உள்ளன. எனவே அவை உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட பிரதேசங்களாக விளங்குகின்றன.

36. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற நாடாக இருப்பினும் நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம் விளக்குக?

இந்தியாவில் பல்வேறுபட்ட இனம், மொழி, உணவு, உடை, பழக்கவழக்கங்களை உடைய மக்கள் வாழ்கின்றனர். பல வேறுபாடுகள் இருப்பினும் நாம் அனைவரும் இந்தியர் என்ற உணர்வால் ஒரே தேசத்தால் ஒன்றுபட்டு வாழ்கிறோம். எனவே இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை நிலவும் நாடு என அழைக்கப்படுகிறது .

பகுதி ஈ

IX. இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்

